**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ஆம் நாள் புதன்கிழமை**
**I.A.05/24 in O.S.217/2020**

மனோகரன் ... மனுதாரர்/வாதி

//எதிர்//

கனகசபை ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இறுதியாக 28.10.2024–அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பேரா.முருகையன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, கடந்த 23.11.2023ந் தேதி மனுதாரர் தரப்பு தவறுகைக்காக தள்ளுபடியான மேற்படி நம்பர் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவாக வேண்டி இந்த மனு சி.பி.சி. ஆர்டர் 9 ரூல் 9 மற்றும் பிரிவு 151–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரரின் பிரமான வாக்குமூலத்தின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய வேண்டியும் அதன் தொடர் பரிகாரமாக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தொடர்ந்த நிலையில் மனுதாரருக்கு கடந்த சில மாதங்களாக உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்றும், அதனால் அவர் மனுதாரரை அழைத்தபோது அவரை சந்தித்து வழக்கின் முழுவிவரங்களையும் சொல்லாமலும், சில ஆவணங்கள் மனுதாரர் வசம் இருந்ததாலும் மனுதாரர் நீதிமன்றத்திற்கு வந்தவுடன் மனுதாரர் வழக்கறிஞர் பெரம்பலூரிலிருந்து உடனே வந்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாயார் செய்ய முடியவில்லை என்றும் அதனால் மனுதாரரால் கடந்த 23.11.2023ந் தேதி அன்று முதன்மை சத்தியபிரமாண

வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்று அசல் வழக்கானது தள்ளுபடியாகிவிட்டது என்றும், வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும் ஆதாலால் கடந்த 23.11.2023 ந் தேதி தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவாக வேண்டி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரரின் மனுவில் கண்டுள்ள விபரம் சரியல்ல என்றும், இது ஒரு பட்டியல் வழக்கு விசாரணையில் போடப்பட்ட வழக்கு என்றும், மனுதாரருக்கு வழக்கில் கூடி வரக்கூடிய கட்சி இல்லை என்பது மனுதாரருக்கும் தெரியும் என்றும், தெரிந்தும் எதிர்மனுதாரை அலைக்கழிக்க திட்டமிட்டே இம்மனுவும், அசல் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு வழக்கு விசாரணை தேதியான 23.11.2023 தேதியிலும் அதற்கு சில மாதங்கள் முன்பிருந்து உடல்நிலை சரியில்லை எனவும் மனு அபிடவிட்டில் கூறியுள்ள விவரம் உண்மையல்ல என்றும், மனுதாரர் எந்த வியாதியின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தார் என்ற விவரமோ, அது சம்பந்தமாக எவ்வித மருத்துவ சான்றிதழோ இம்மனு அபிடவிட்டில் கூறாமலும், தாக்கல் செய்யாமலும் கோரும் இம்மனு பரிகாரம் மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்க கூடியது அல்ல என்றும், மனுதாரர் இம்மனு தாக்கல் செய்வதற்கு முன்பும் பின்பும் நல்ல நிலையில் தான் உள்ளார் என்றும், எவ்வித தகுந்த காரணம் ஏதுமில்லா நிலையிலும் இதுபோன்ற மனு அனுமதியாகும் என்ற தவறான நிலைப்பாட்டினை மனுதாரர் கொண்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆதலால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு இவ்வெதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>5. பிரச்சணைக்குரிய தீர்வு.</u>

மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் அதன் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தொடந்த நிலையில் வழக்கில் கடந்த

23.11.2023 ந் தேதி முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்ய வாய்தா இருந்த அன்றைய தினம் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த நிலையில் கடந்த சில மாதங்களாக உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை சந்திக்க இயலாததால் வழக்கறிஞர் மனுதாரரை அழைத்தபோது அவரை சந்தித்து வழக்கின் முழுவிவரங்களையும் சொல்லாமலும், சில ஆவணங்கள் மனுதாரர் வசம் இருந்ததாலும் மனுதாரர் நீதிமன்றத்திற்கு வந்தவுடன் மனுதாரர் வழக்கறிஞர் பெரம்பலூரிலிருந்து உடனே வந்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாயார் செய்ய முடியவில்லை என்றும் அதனால் மனுதாரரால் முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய முடியாமல் மேற்படி அசல் வழக்கானது தள்ளுபடியாகிவிட்டது என்றும், மனுதாரருக்கு வழக்கில் நல்ல கட்சி உள்ளது என்றும் ஆகையால் கடந்த 23.11.2023 ந் தேதி தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவாக வேண்டும் என்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரருக்கு வழக்கில் கூடி வரக்கூடிய கட்சி இல்லை என்பது மனுதாரருக்கும் தெரியும் என்றும், தெரிந்தும் எதிர்மனுதாரை அலைக்கழிக்க திட்டமிட்டே இம்மனுவும், அசல் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் எந்த வியாதியின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தார் என்ற விவரமோ, அது சம்பந்தமாக எவ்வித மருத்துவ சான்றிதழோ இம்மனு அபிடவிட்டில் கூறாமலும், தாக்கல் செய்யாமலும் கோரும் இம்மனு பரிகாரம் மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்க கூடியது அல்ல என்றும், மனுதாரர் இம்மனு தாக்கல் செய்வதற்கு முன்பும் பின்பும் நல்ல நிலையில் தான் உள்ளார் என்றும், எவ்வித தகுந்த காரணம் ஏதுமில்லா நிலையிலும் இதுபோன்ற மனு அனுமதியாகும் என்ற தவறான நிலைப்பாட்டினை மனுதாரர் கொண்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆதலால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதங்களை பரிசீலித்து பார்க்கும்போது அசல் வழக்கினை மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் அதன் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தொடரப்பட்டு

வழக்கில் கடந்த 10.08.2023 அன்று எழுவினா வனையப்பட்டு கடந்த 24.08.2023–ல் விசாரணைக்கு பட்டியல் இடப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் கடந்த 23.11.2023 அன்று மனுதாரர் தரப்பு விசாரணைக்காக போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் மனுதாரர் விசாரணை தொடங்காததாலும் அசல் வழக்கானது விசாரணைக்காகவே ஐந்து வாய்தாக்கல் நிலுவையில் இருந்ததாலும் மேற்படி வழக்கானது 23.11.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. மேற்படி மனுதாரர் மனுவில் கடந்த சில மாதங்களாக மனுதாரருக்கு உடல் நிலைய சரியில்லாத காரணத்தால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை மனுதாரர் சந்திக்க இயலாததால் வழக்கறிஞர் மனுதாரரை அழைத்தபோது அவரை சந்தித்து வழக்கின் முழுவிவரங்களையும் சொல்லாமலும், சில ஆவணங்கள் மனுதாரர் வசம் இருந்ததாலும் மனுதாரர் மேற்படி தேதியில் நீதிமன்றத்திற்கு வந்தவுடன் மனுதாரர் வழக்கறிஞர் பெரம்பலூரிலிருந்து உடனே வந்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தயார் செய்ய முடியவில்லை என்று மனுவில் கூறியுள்ளார்.

9. மேற்படி மனுதாரரின் மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சங்கதியில் மனுதாரர் எந்த வியாதியின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தார் என்ற விவரமோ, அது சம்பந்தமாக எவ்வித மருத்துவ சான்றிதழோ மனுதாரர் மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர் மனு தாக்கல் செய்வதற்கு முன்பும் பின்பும் நல்ல நிலையில் தான் உள்ளார் என்றும், எவ்வித தகுந்த காரணம் ஏதுமில்லா நிலையிலும் இதுபோன்ற மனு அனுமதியாகும் என்ற தவறான நிலைப்பாட்டினை மனுதாரர் கொண்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

10. மேற்படி மனுதாரரின் மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்ட மறுப்புரை சங்கதிகள் ஏற்புடையதாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதினாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் அசல் வழக்கில் அவரவர் தரப்பினை நிரூபிக்க அவரவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர் தாவாவில் தனக்குரிய கட்சி என்ன? என்பதை எடுத்துரைப்பதற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படுவதால் எதிர்மனுதாரருக்கு பெருத்த இழப்பு ஏதும் ஏற்பட போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதி அதன்படியே இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

11. மேற்படி மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு போக்குவரத்து போன்ற சிற்சில செலவுகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதால் மேற்படி மனுவானது செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என கருதி அதன்படியே இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

12. முடிவில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகை ரூ.500/-ஐ வரும் 03.02.2025 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

அழைக்க : 05.02.2025

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/-திரு.S.கணேஷ்,எம்.காம்.,எம்.எல்.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.

(ஒம்/-திரு.S.கணேஷ்,எம்.காம்.,எம்.எல்.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.